இருக்கிறார்கள். எவ்வளவு நாட்களில் இவ்வளவு அர்ரியர்ஸ் சேர்ந்து விட்டது? அத்தகைய அர்ரியர்ஸ் சேர்வதற்கு - அவ்வப்போது வசூலிக்காமல் ஏன் விட்டார்கள் என்பதற்குரிய தகவலைத் தருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் விவசாயிகள் மின் கட்டணத்தை ஒவ்வொரு மாதமும் 21-ம் தேதிக்குள் கட்டவில்லையென்றால் டிஸ்கனெக்ஷன் செய்தார்களே, அந்த முறைகளை இந்தத் தொழில் அதிபர்களிடத்தில் ஏன் கடைபிடிக்கப்படவில்லை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பாக்கியைப் பொறுத்தவரையில் அக்டோபர் 26 முதல் பிப்ரவரி 27 வரையில் மால்கோ நிறுவனத்தில் ஏற்பட்டு இருக்கிறது. முந்தைய ஆட்சி இருந்த நேரத்தில் ஏற்பட்டது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். சக்தி பைப்ஸ் பொறுத்த வரையில் எந்த ஆண்டு என்று இல்லை. ஆனால் 14·55 லட்ச ரூபாய்தான் பாக்கி. அதேபோல் ப்ளாஸ்டிக் பேசின் கெமிகல்ஸ் எப்போது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் அவ்வப்போது அவர்கள் மின் கட்டணத்தை செலுத்தாவிட்டால் மின்துண்டிப்பு செய்ய வேண்டும் என்று இந்த அரசு அறிவுறுத்தி வருகிறது. அதைச் செய்து வருகிறோம். ஏற்கனவே ஏன் வசூலிக்கவில்லை என்பதைப் பற்றி என்னிடத்தில் கேட்டு பயன் இல்லை.

Accounts of Queen Mary's College Hostel at Madras

*Q.No. 702: Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the accounts of the students hostel of the Queen Mary's College, Madras are audited by chartered accountants;

(b) if so, the methods adopted to select them;

(c) the names of the chartered accountants for the financial years 1975-76, 1977-78; and

(d) the remuneration paid to them?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) சாசனக் கணக்கர்களிடமிருந்து மாணவியர் விடுதிக் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கான மேற்கோள்களைக் Quatations) கோரிப் பெற்று, அதன் அடிப்படையில் அவர்கள் கல்லூரி முதல்வரால் நியமிக்கப்பெற்றனர்.

1979 ஏப்ரல் 16]

(இ) மற்றும் (ஈ) :

ஆண்டு	சாசனக் கணக்கர்களின் பெயர் விவரம்
1975-76	பா. இராமன் அண்டு கோ, சார்டர்டு அக்கௌண்டண்ட், 4 சாமியர்ஸ் ரோடு, நந்தனம் எக்ஸ்டென்ஷன், சென்னை-35.
1976-77 / 1977-78	இராம் மற்றும் இராமன், சார்டர்டு அக்கௌண்டண்ட்ஸ், 27/7, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை-4.
1975-76	ரூ. 273·75
1976-77	ரூ. 281·25
1977-78	ஆண்டிற்கான தணிக்கை இன்னும் முடியவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும் போது சென்னையிலுள்ள ராணி மேரி கல்லூரி கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டது என்று சொன்னார்கள். அந்த தணிக்கை அறிக்கையில் ஏதாவது தவறுகள் நடைபெற்று இருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறதா? அப்படி சுட்டிக்காட்டப்பட்டிருந்தால், என்ன விவரம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. செ. மெ. ராஜூ : தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள ராணி மேரி கல்லூரியில் தணிக்கை செய்தது போல், எல்லாக் கல்லூரிகளிலும் தணிக்கை செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா? அப்படி செய்தால்தான் கல்லூரிகளில் நடைபெறும் முறைகேடுகளை, தவறுகளைக் கண்டறிய முடியும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே. அரசுக் கல்லூரிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ விடுதிகளின் வரவு செலவுக் கணக்குகள் கல்லூரிக் கல்வி இயக்குனர் அலுவலகத்தைச் சேர்ந்த தணிக்கை அதிகாரிகள் அடங்கிய குழுவால் தணிக்கை செய்யப்பட்டு வந்தன. இத் தணிக்கைக் குழுவில் தற்போது இரண்டே பிரிவுகள் உள்ளதால் மேலும் மேலும் பெருகி வந்த தணிக்கை வேலைகளை உடனுக்குடன் செய்ய இயலாது போய்விட்டது. ஆதலால் தணிக்கை வேலையில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே. அரசு கல்லூரிகளைச் சார்ந்த மாணவ விடுதிகளின் கணக்குகளைப் பதிவுசெய்யப்பட்ட சாசனக் கணக்காளர்களை (சார்ட்டர்ட் அக்கௌன்டென்ட்) கொண்டு 1975-76, 1976-77-ம் ஆண்டு

முடிய தணிக்கை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. அது போலவே, 1977–78-ம் ஆண்டிற்கான கணக்குகளையும் தணிக்கைக்காக, சாசனக் கணக்கர்களிடம் ஒப்படைக்க அரசுக் கல்லூரி முதல்வர்களுக்கு அனுமதி அளிக்கப் பெற்றுள்ளது.

திரு சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, இப்போது பல தனியார் கல்லூரிகளிலே மாணவர்களுடைய விடுதிகளில் அவர்களுக்கு அதிகக் கட்டணம் வசூலிப்பது மட்டுமல்ல, அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப்-உதவித் தொகை கொடுப்பதும் 4-5 மாதங்களுக்குள் செலவழிக்கப்பட்டு விட்டது என்று எடுத்துக் கொள்கிறார்கள். அதிலே பல ஒழுங்கீனங்கள், முறைகேடுகள் ஏற்பட்டு இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அது சம்பந்தப்பட்ட தணிக்கை செய்வதற்கும், கல்லூரி விடுதிகளில் நடக்கும் நடவடிக்கைகளை, கணக்குகளை தணிக்கை செய்வதற்கும் தனியான ஏற்பாடு ஏதாவது இருக்கிறதா? இல்லையெனில், இனிமேலாவது ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியார் கல்லூரிக் கணக்குகளை அரசு தணிக்கை செய்து கொண்டுதான் இருக்கிறது. எங்காவது ஒழுங்காக இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்கு வருமானால், குறிப்பிட்ட புகாரைத் தருவார்களானால் நடவடிக்கை எடுக்கப்படும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. யா. சை. மு. யூசுப் : மைனாரிடி கல்லூரி என்ற பெயரில் கல்லூரிகளை நடத்திக் கொண்டு கணக்குகளில் தவறு செய்பவர்கள் மீது தனியாக நடவடிக்கை எடுக்க அரசு தனியாகச் சட்டம் கொண்டுவர முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது அது தேவையில்லையென்று கருதுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தனியார் கல்லூரிகளில் இருக்கக் கூடிய விடுதிகளில் ஏற்சனவே தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பிற்பட்ட மாணவர்கள் தங்குகிறார்கள். அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்க காலதாமதமாகிறது. அதற்கு முன்பாக ஐடென்டிடி கார்டு வாங்கிக் கொடுத்து விட்டாலும் பணம் கட்டினால்தான் தங்க முடியும். உணவு அருந்த முடியும் என்ற நிலை இருக்கிறது. இந்த நிலையைப் போக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைப் பற்றிக் குறிப்பிட்ட புகார் வந்தால் நடவடிக்கை எடுத்தால் சீரடையும் என்று கருதுகிறேன்.